நாள்.27.11.2025

R.L.T.O.P. No. 3/2025

பெயர்.நக்கீரன்

த.பெ.ராசு வேளாளர்

<u>ம.த.சா.1– எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

என் குடும்ப சொத்துகளை பொறுத்து பட்டுக்கோட்டை மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் பாக பிரிவினை வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். அந்த வழக்கில் என் அம்மாதான் வாதி நான் 3ம் எதிர்வாதி என்றால் ஆமாம். இந்த மனுவை எனக்காக தாக்கல் செய்த வழக்கறிஞர் சரபேஸ்வரன் தான் என் அம்மாவிற்குஅந்த வழக்கில் வழக்கறிஞர் என்றால் ஆமாம். நானே என் அம்மா பெயரில் அந்த வழக்கை தாக்கல் செய்து நடத்தி வருகிறேன் என்றால் இல்லை. இந்த மனுவிலுள்ள காம்ப்ளக்ஸ் அடங்கிய சொத்து அந்த பாக பிரிவினை வழக்கில் என் அப்பாவின் சுய சம்பாத்திய சொத்து என்று அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அந்த பாக பிரிவினை வழக்கில் 4ம் பிரதிவாதியாக பார்வதியும், 5ம் பிரதிவாதியாக வசந்தாவும் உள்ளார்கள் என்றால் ஆமாம். வசந்தா என்அப்பாவிற்கு சட்டப்படியான வாரிசு என்றால் சரிதான். இந்த மனு சொத்தில் வசந்தாவிற்கும் பங்கு உள்ளது என்றால் ஆமாம். இந்த மனுவை தாக்கல் செய்வதற்கு வசந்தா எனக்கு அதிகாரம் கொடுத்துள்ளாரா என்றால் நான் பராமரித்து வருகிறேன் அதனால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

வசந்ததா தான் மனு சொத்தை பராமரித்து வருகிறார் என்று எதிர்மனுதாரரிடம் வசந்தா கூறி வருகிறார் என்றால் இல்லை. மனு சொத்து சம்பந்தமாக எனக்கும் வசந்தாவிற்கும் பிரச்சனை ஏற்பட்டதால்தான் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. எங்களுக்குள் சொத்தை பிரித்துக்கொள்ள தாக்கல் செய்துள்ளேன். வசந்தாவும் அவரை சார்ந்தவர்களும் எதிர்மனுதாரரிடம் காலி செய்ய வேண்டும், வாடகை கொடுக்க வேண்டும் என்று நிர்பந்திக்கிறார்கள் என்றால் இல்லை. நான் பராமரித்து வருவதால் அவர்கள் உள்ளே வரவில்லை. எதிர்மனுதாரர் வசந்தா மற்றும் அவரை சார்ந்தவர்களிடம் எதிர்மனுதாரருக்கு உரிய ஒத்தி தொகையை கொடுத்துவிட்டால் காலி செய்வதாக தெரிவித்து வருகிறார் என்றால் சரியல்ல. மோசடியாக தயாரிக்கப்பட்டது என்று நான் புகார் கொடுத்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் கொடுத்தது பொய் புகார் என்றால் சரியல்ல. 4வது கடையில் எதிர்மனுதாரர் வாடகைதாரராக இல்லை என்றால் சரியல்ல. அவர்தான் வாடகைதாரராக இருந்தார். 5வது மற்றும் 4வது கடைக்கு இடையிலுள்ள தடுப்பு சுவர் எடுக்கப்பட்டு ஒரே கடையாக உள்ளது என்றால் இல்லை. தற்சமயம் எதிர்மனுதாரர் 7வது மற்றும் 11வது கடையில்தான் கடை

நடத்தி வருகிறார் என்றால் இல்லை 4 மற்றும் 11வது கடையில்தான் இருக்கிறார். 65/6 எதிர்மனுதாரர் அத்துமீறி பூட்டை உடைத்து வைத்துள்ளார். 65/6 யை பொறுத்து நான் சட்ட நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுத்துள்ளேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

என் அப்பாவிடமோ, என்னிடமோ எதிர்மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்யும் காலத்தில் நிலச்சுவான்தார்-வாடகைதாரர் உறவில் இல்லை என்றால் எதிர்மனுதாரர் என் அப்பாவிடம் வாடகைதாரராக இருந்தார் என்னிடம் அக்ரிமெண்ட் போடவில்லை. ம.சா.ஆ.3 மற்றும் 4 வாடகை ஒப்பந்த பத்திரத்தில் நான் கையெழுத்து போட்டுள்ளேனா என்றால் இல்லை இருவரும் ஒரே நேரத்தில்தான் கையெழுத்து போடவேண்டும். ம.சா.ஆ.3 மற்றும் 4 பத்திரங்கள் 30.12.2020 ல் அச்சடிக்கப்பட்டதாக உள்ளது என்றால் ஆமாம். அன்றிலிருந்து நான் எப்போது போய் கையெழுத்து போடவேண்டும் எதிர்மனுதாரரிடம் கேட்டேன் என்றால் அன்றே நான் கேட்டேன் அவர் மறுத்துவிட்டார். அதன்பின்னிட்டு நான் 2024 வரை எதிர்மனுதாரர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் எடுத்துள்ளேன். வக்கீல் நோட்டீஸ் அனுப்பினேனா என்றால் இல்லை. ம.சா.ஆ.3 மற்றும் 4 க்கு வரைவு தயார் செய்தது எனது வழக்கறிஞர்தான் என்றால் ஆமாம். இந்த இரு பத்திரங்களும் வழக்கிற்காக என்னால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் இல்லை. நான் 2020 ல் எதிர்மனுதாரரிடம் போய் அக்ரிமெண்ட் போட்டுக்கொள்ள வேண்டும் என்று கேட்கவில்லை வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

அசல் மனுவை என்னால் மட்டும் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ஒத்திதாரர் என்ற அடிப்படையில் மனு சொத்துகளில் கடை நடத்தி வருகிறார் என்றால் சரியல்ல. ஒத்தி தொகையை என் தந்தையின் வாரிசுகள் அனைவரும் சேர்ந்து எதிர்மனுதாரருக்கு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. என் மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.